www.Padasalai.Net www.TrbTnpsc.com

வகுப்பு : 6

தேர்வு எண்

# மூன்றாம் பருவம் - தொகுத்தறி மதிப்பீடு(SA)-2024-25

நேரம் : 2.00 மணி] **கணிதம்** [மொத்த மதிப்பெண்கள் : 60

பகுதி - I

I. சரியான விடையினைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 10x1=10

1. $\frac{53}{17}$ இன் தலைகீழி
   அ) $\frac{53}{17}$ ஆ) $5\frac{3}{17}$ இ) $\frac{17}{53}$ ஈ) $3\frac{5}{17}$
2. $\frac{6}{7} = \frac{A}{49}$ எனில் A இன் மதிப்பு என்ன?
   அ) 42 ஆ) 36 இ) 25 ஈ) 48
3. பூச்சியத்திற்கு இடது புறம் 20 அலகுகள் தொலைவில் உள்ள எண்ணின் எதிரெண்
   அ) 20 ஆ) 0 இ) -20 ஈ) 40
4. -5 முதல் 6 வரையிலான எண்களில் ------- மிகை முழுக்கள் உள்ளன.
   அ) 5 ஆ) 6 இ) 7 ஈ) 11
5. ஒரு செவ்வகத்தின் ஒவ்வொரு பக்கமும் இரு மடங்காகும் போது, அதனுடைய பரப்பளவு ------- மடங்காகும்.
   அ) 2 ஆ) 3 இ) 4 ஈ) 6
6. ஒரு சதுரத்தின் பக்கம் 10 செ.மீ அதனுடைய பக்கம் மூன்று மடங்காகும் போது, சுற்றளவு எத்தனை மடங்காக அதிகரிக்கும்.
   அ) 2 மடங்கு ஆ) 4 மடங்கு இ) 6 மடங்கு ஈ) 3 மடங்கு
7. நிலைக்குத்துக்கோட்டை சமச்சீர்க் கோடாகப் பெற்ற சொல் எது?
   அ) DAD ஆ) NUM இ) MAM ஈ) EVE
8. பின்வருவனவற்றுள் எந்த எழுத்திற்குச் சமச்சீர்க் கோடு கிடையாது?
   அ) A ஆ) P இ) T ஈ) U
9. 15, 17, 20, 22, 25 .......... என்ற தொடரின் அடுத்த எண்.
   அ) 28 ஆ) 29 இ) 27 ஈ) 26
10. பிபனோசித் தொடரின் 6 வது மற்றும் 5 வது உறுப்பிற்கு இடையேயான வேறுபாடு
   அ) 6 ஆ) 8 இ) 5 ஈ) 3

II. கோடிட்ட இடங்களை நிரப்புக. 5x1=5

11. --------- என்ற எண்ணிற்கு அந்த எண்ணே தலைகீழாக அமையும்.
12. --------- ஆனது மிகை முழுவும் அல்ல குறைமுழுவும் அல்ல.
13. 5 செ.மீ² = ---------- மி.மீ²
14. ஒரு சாய்சதுரம் -------- சமச்சீர்க் கோடுகளைப் பெற்றிருக்கும்.
15. 1,1,2,3,5,8,13,21,34 ......... இந்த சிறப்பு எண் தொடரை ------------ என்கிறோம்.

III. சரியா? தவறா எனக் கூறுக. 5x1=5

16. $\frac{13}{4}$ இன் கலப்பு பின்னம் $3\frac{1}{4}$ ஆகும்.
17. எல்லா முழு எண்களும் முழுக்களே.
18. செவ்வகத்தின் பரப்பளவு என்பது $(l+b)$ சதுர அலகுகள்.
19. ஒரு வட்டத்திற்கு எண்ணற்ற சுழல் சமச்சீர் வரிசைகள் உள்ளன.
20. -1 ஆனது 0 க்கு வலது புறம் அமையும்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
Scanned with CamScanner

**IV. பொருத்துக.** **5x1=5**

| | | |
|---|---|---|
| 21. சதுரம் | – | மூன்று சமச்சீர் கோடுகள் |
| 22. இணைகரம் | – | ஒரு சமச்சீர்க் கோடு |
| 23. சமபக்க முக்கோணம் | – | நான்கு சமச்சீர்க் கோடுகள் |
| 24. இரு சமபக்க முக்கோணம் | – | இரு சமச்சீர்க் கோடுகள் |
| 25. செவ்வகம் | – | சமச்சீர்க்கோடுகள் இல்லை |

## பகுதி – II

**V. ஏதேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும்** **10x2=20**

26. சுருக்குக. $\frac{3}{7} + \frac{2}{3}$

27. $5\frac{3}{7}$ ஐத் தகா பின்னமாக மாற்றுக.

28. சுருக்குக. $35 \times \frac{3}{7}$

29. -5 மற்றும், 4 எண்களுக்கு இடையே உள்ள அனைத்து முழுக்களையும் எழுதுக.


30. பின்வரும் எண்களுக்கு எதிரெண் காண்க.
    i) -19 ii) 0 iii) -312 iv) 789

31. முழுக்களாகக் குறிப்பிடுக. ₹ 15847 வைப்புத் தொகை.

32. ஒரு சதுரத்தின் பக்கம் 5 செ.மீ எனில் அதன் சுற்றளவு காண்க.

33. 12 செ.மீ நீளமும் 7 செ.மீ அகலமும் கொண்ட செவ்வகத்தின் பரப்பளவு காண்க.

34. சுழல் சமச்சீர் வரிசையைக் கண்டுபிடிக்க.

அ) 

ஆ) 

35. 50, 51, 53, 56, 60, ...... அமைப்பில் அடுத்த மூன்று எண்களை எழுதுக.

36. 1 H203W 4A5R6E 7Y809U? என்ற அமைப்பை உற்று நோக்கி எண்களை மறைக்கும் போது எண்களுக்கிடையே அமைந்த சொற்களை காண்க.

37. A இக்கு பதில் (+) எனவும் B க்குப் பதில் (-) எனவும் C க்குப் பதில் (X) எனவும் D க்குப் பதில் (+) எனவும் எடுத்துக் கொண்டால் 4B3C5A 30 D2 என்ற அமைப்பின் விடையைக் காண்க.

## பகுதி - III

**VI. ஏதேனும் 5 வினாவிற்கு விடையளிக்கவும்.** **5x3=15**

38. கூட்டுக. $3\frac{2}{4} + 7\frac{2}{5}$

39. 6 மீ நீளமுள்ள கம்பியினை $1\frac{1}{2}$ மீ நீளமுடைய சிறிய கம்பிகளாக வெட்டினால் எத்தனை சிறிய கம்பிகள் கிடைக்கும்?

40. பின்வரும் முழுக்களை ஏறுவரிசையில் எழுதுக.
    -15, 0, -7, 12, 3, -5, 1, -20, 25, 18

41. ஒரு கரும்பலகையின் சுற்றளவு 6 மீ மற்றும் அகலம் 1 மீ எனில் நீளத்தைக் காண்க.

42. அடிப்பக்கம் 18 செ.மீ மற்றும் உயரம் 12 செ.மீ அளவுகள் உள்ள ஒரு செங்கோண முக்கோணத்தின் பரப்பளவு காண்க.

43. MOM, COM, HIDE மற்றும் WICK ஆகிய சொற்களின் கீழ்ப்பகுதியில் ஆடியை வைத்தால் ஆடியில் கிடைக்கும் சொற்களின் வடிவங்களைக் கண்டறிக.

44. 16 மற்றும் 28 என்ற இரு எண்களின் மீ.பொ.கா காண்க.



www.Padasalai.Net
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
Scanned with CamScanner